நகல்

8.6.1912 மு. ரா. கந்தசாமி கவிராயர்

நகல் – 1

M. R. Kandasamy Kavirayar,
Editor "Vidya Bhanu"
Madura.

உ
முருகன் துணை.

மு. ரா. கந்தசாமிக் கவிராயர்,
"வித்தியாபாநுப்" பத்திராதிபர்,
மதுரை. 8-6-1912

No. ------

ஸ்ரீமத் ஸ்வாமியவர்கள் திருவடிக்கமலங்கட்கு விண்ணப்பம். ஸ்வாமியவர்கள் திருவருள் வசத்தாலனைவரும் சுகமுளேம். அவண் யாவரும் க்ஷேமமாயிருத்தலை யறியப் பேரவா வுடையேன்.

மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபையின் நிகழ்ச்சி யாவும் பத்திரிகைகள் மூலம் நன்கு தெரிந்திருத்தல் கூடுமே. அச்சபையின் மூன்றாவது வருஷ பூர்த்திக் கொண்டாட்டம் கடகரவி ௨ ௳ முதல் 3 நாள் நடைபெறும். இந்த மூன்று நாளும் அல்லது முதனாள் மட்டும் ஸ்வாமியவர்கள் பெருங்கருணையுடன் சபா நாயகராயமர்ந்து சிறப்பித்துச் சபையாரைக் கௌரவப் படுத்த வேண்டும். என்று அச்சபையார் எல்லோரும் அபிப்பிராயங் கொடுத்தவாறு அவர்கட்குப் பிரதிநிதியாக அடியேன் பிரார்த்திக்கின்றேன். நாட்டுக்கோட்டையார்கள் கல்வி விருத்திக்கு மூலமாக ஏற்பட்டுள்ளது இப்பெருஞ்சபையே. சபையாரெல்லாரும் உள்ளன்புடன் ஸ்வாமிகளையே விரும்புகின்றனர். ஸ்வாமியவர்கள் ஒருநாளாவது வந்தால் அவர் குலத்தார்க்குப் பெரிதும் ஊக்கமுண்டாகும். கல்வி விருத்தி விஷயம் பரவப்படும். பரம்பரைக்கும் நன்மை நமது பாஷைக்குப் பெரிதும் உண்டாகும். இது பற்றியே அடியேன் ஸ்வாமியவர்கள் அருமைத் திருமேனி ஆரோக்கிய வசதிக்குச் சற்று வருத்த நேரினும் தோஷமில்லை யென்று வன்னெஞ் சனுதித்த துணையும் இரந்து வேண்டுகிறேன். திரிசிரபுரத்திருந்து மிக்க சௌகர்யமாக அழைத்து வர வேண்டும் ஏற்பாடுகளை நன்கு

நகல்

8.6.1912 மு. ரா. கந்தசாமி கவிராயர்

நகல் - 1

செய்விப்பேன். சிறிதும் அசௌகர்யமில்
லாமலும் சபையில் சிறிதாவது முறை
பிறழ்ச்சி நேராமலும் சுவாமிகள் திருவாய்
பாங்கின்படியே எல்லாம் செய்விக்க
லாம். அடியேன் சொல்வழியே இவ்விஷ
யங்களில் சபையார் யாவரும் நடப்பர்.
உலக நன்மையையும் தமிழபிவிருத்தியை
யுங் கருதி சிரமம் பாராது ஒப்புக்கொண்
டு எங்களை மகிழ்விக்கும்படி பன்முறை
பணிந்து வேண்டுகிறேன். பல இடங்கட்
கு அறிவிக்கவேண்டியிருத்தலால் விரை
வாய் தெரிய வேண்டியதாயிருக்கிறது. கரு
ணை பாலித்து அனுகூலமான பதில்
கட்டளையிட்டருள எதிர்பார்க்கிறேன்.

ஊழியன்.

மு. ரா. கந்தசாமிக் கவிராயன்,

சன்மார்க்க சபைப் பிரதிநிதி.

நகல்

8.6.1912 மு. ரா. கந்தசாமி கவிராயர்

நகல் - 1

4. ப. 179

[illegible]

மு. ரா. கந்தசாமிக் கவிராயர்
8-6-1912

Copied

p. 270-272.

த. க. VOL 'C'

(40)